**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 80/2021**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகபிரபு | Caste | : |
| Father 's Name | : பாலகிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)
**22.03.2024**
**முதல் விசாரணை**

நான் சென்னையில் வசித்து மொபைல் சர்வீஸ் செய்து வருகிறேன். கடந்த 06.02.2018 அன்று மாலை 6 மணியளவில் என்னுடைய தகப்பனார் பாலகிருஷ்ணன் வலையங்குளத்தில் உள்ள கருப்பசாமி கோவிலுக்கு செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு சென்றார். மாலை 6.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது அருகில் இருந்த நபர்கள் நேராக வீட்டில் வந்து என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். உடனே சம்பவயிடம் சென்று பார்த்த போது செந்தூர் பார் அருகே பதிவு செய்யப்படாத கார் என் அப்பாவின் இருசக்கர வாகனமான 6554 என்ற வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டு ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுனர் பெயர் சதீஷ்குமார் என்று சொன்னார்கள். ஆனால் நான் பார்க்கவில்லை. நாங்கள் உடனடியாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று பார்த்த போது தலை மற்றும் இரண்டு கால்களிலும் காயம் இருந்தது. அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்து பிரீத்தி மருத்துவமனைக்கு மாற்றினோம். அங்கு 3 நாள் இருந்துவிட்டு மீண்டும் அரசு மருத்துவமனைக்கு வந்து ஒரு வாரம் கழித்து 11.02.2018 அன்று இறந்துவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இறந்துபோனவர் என் அப்பா என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவர் என் அப்பா என்பதால்

பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 80/2021**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பஞ்சவர்ணம் | Caste | : |
| Father 's Name | : க/பெ. பாலகிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)
**22.03.2024**
**முதல் விசாரணை**

நான் சென்னையில் வசித்து வருகிறேன். கடந்த 06.02.2018 அன்று மாலை 6 மணியளவில் என்னுடைய கணவர் பாலகிருஷ்ணன் வலையங்குளத்தில் உள்ள கருப்பசாமி கோவிலுக்கு செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு சென்றார். மாலை 6.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது அருகில் இருந்த நபர்கள் நேராக வீட்டில் வந்து என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். உடனே சம்பவயிடம் சென்று பார்த்த போது செந்தூர் பார் அருகே கார் என் கணவரின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டு ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுனர் பெயர் தெரியாது. நான் அவரை பார்க்கவில்லை. நாங்கள் உடனடியாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று பார்த்த போது தலை மற்றும் இரண்டு கால்களிலும் காயம் இருந்தது. அங்கு சிகிச்சையில் இருந்து பிரீத்தி மருத்துவமனைக்கு மாற்றினோம். அங்கு 3 நாள் இருந்துவிட்டு மீண்டும் அரசு மருத்துவமனைக்கு வந்து ஒரு வாரம் கழித்து 11.02.2018 அன்று இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இறந்துபோனவர் என் கணவர் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவர் என் கணவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.